**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**RLTOP No.02/2024**

**மனுதாரர் தரப்பு சாட்சி–1 வெங்கடேஷ்குமார் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) மனு சொத்தை நான் எப்போது கிரையம் பெற்றேன் என்றால் 14.06.2022 ல் கிரையம் வாங்கினேன். யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் கோபாலரெத்தினம் என்பவரிடம் இருந்து வாங்கினேன். நான் மனு சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு எதிர்மனுதாரர் மேற்படி கடையில் வாடகைக்கு இருந்தார் என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு எதிர்மனுதாரர் எவ்வளவு வாடகை தொகை செலுத்தி வந்தார் என்று தெரியுமா என்றால் ரூ.15,000/– செலுத்தியதாக என்னிடம் கூறினார். எவ்வளவு தொகை முன்பணமாக பெறப்பட்டது என்றால் ஒரு கடைக்கு ரூ.25,000/– கொடுத்தாக சொன்னார். எனக்கு கிரையம் கொடுத்த கோபாலரெத்தினத்தை விசாரித்தால் மேற்படி விபரம் உண்மையா என தெரியும் என்றால் சரிதான். கோபலரெத்தினத்திற்கு முன்பு அவரது தகப்பனாரிடம் எதிர்மனுதாரரின் தகப்பனார் வாடகைக்காக இருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. ஆரம்ப காலத்தில் எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் ரூ.300/–க்கு வாடகைக்கு இருந்தனர் என்றால் அதுபற்றி தெரியாது.

2) எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுரையை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். எதிர்மனுதாரர் தனது பதிலுரையில் ஆரம்ப காலத்தில் எவ்வளவு வாடகை தொகையை யாரிடம் செலுத்தினார் என்பது பற்றி குறிப்பிட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. என்ன காரணத்திற்காக கடையை காலி செய்ய கோரினேன் என்றால் கடையை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக காலி செய்ய சொன்னேன். மேற்படி 3 கடைகளுக்கும் மேற்குபுறம்

நான் கடை வைத்துள்ளேனா என்றால் ஆமாம். 3 கடைகளையும் மேல் மாடி எனது குடியிருப்பு உள்ளதா என்றால் ஆமாம். நான் கடை நடத்தும் கட்டிடம் எத்தனை சதுர அடி என்றால் 535 சதுர அடி ஆகும். மனு சொத்தின் அளவீடுகள் எவ்வளவு என்றால் நான் கிரையம் பெற்றது முதல் தற்போதுவரை மனு கடையை நான் உள்ளே சென்று பார்த்ததில்லை. மேற்படி கடையை வெளியில் இருந்து பார்த்தால் அதன் அளவு தெரியும் என்றால் சரிதான்.

3) மேற்படி கடைகள் ஒவ்வொன்றும் 10x10 அடி அளவு இருக்கும் என்றால் சரிதான். நான் மேற்படி மனுவில் மேற்படி கடைகளின் அளவு கூறியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கடையின் சர்வே எண் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் இல்லை, கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது மனுவில் கடையின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற உடன் எதிர்மனுதாரருக்கும், நான் கிரையம் பெற்ற அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். சாட்சி மீண்டும் வாய்மொழியாக சொன்னதாக சொல்கிறார்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**